செ.வெ.எண். 25 நாள்.11.12.2017.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.12.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நாங்குநேரி ஒன்றியம், சிங்கநேரி ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் HDFC ERGO General Insurance Company Limited 100 சதவித பங்களிப்புடன் ரூ.36.18 இலட்சம் மதிப்பிட்டில் பள்ளிக் கட்டடம் கட்ட அனுமதி கடிதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், சிங்கநேரி ஊராட்சியைச் சேர்ந்த திரு.ரகுநாதன், த/பெ. பிச்சையா ரெட்டியார் அவர்கள் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு 15 செண்ட் நிலம் தானமாக வழங்கிய பத்திரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்ள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.